முருகப்பெருமான் துணை

# மகான் நேசநாயனார் அருளிய அறிவுரை ஆசி நூல்

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**05.11.2023**, ஞாயிற்றுக்கிழமை

1. மண்ணுலகம் பாதுகாப்புற
மாதரும வேலியிட்டு அருளும்
அண்ணலே ஆறுமுக ஞானியே
அரங்கனே உன் பெருமைகூறி
2. கூறியே சோபகிருது துலைதிங்கள்
குறைவிலா மூவாறோர்திகதி கதிர்வாரம்
(சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 19ம் நாள், 05.11.2023, ஞாயிற்றுக்கிழமை)
தெரிவிப்பேன் அறிவுரை ஆசி
தேசிகன் கேட்க நேசநாயனார் யானும்
3. யானும் உலகநலம் பெற உரைப்பேன்
உயர்வான தரும வழிகாட்டி
ஞானமருளும் கலியுக ஞானி
ஞானதேசிகனை நம்பி வர
4. வருபவர்க்கு வறுமை விலகும்
வருங்காலம் வளம் ஆகும்
கருமவினை விலகி ஓடுவதுடன்
காப்பாக புண்ணிய பலமே சேரும்
5. சேரவே சிறப்பறிவு கூடும்
சிந்தை தெளிவு கண்டடைய
வரவை எல்லாம் தருமமாக்கி
வாழும் காலமே தான் யாரென்ற
6. யாரென்ற தன்னாய்வைத் துவங்கி
உண்மை நிலை அறிய அறிவும்
கூறவே பக்குவம் கூடி நிற்கும்
குருவே சகலதும் எனும் ஞானம்

7. ஞானம் பரவித் தெளிவு கூடி
நம்பிக்கை திடமாகி முழுமைபட
ஞானசித்தி கண்டடைய நேரும்
நல்சிந்தை நன்னடத்தை பெருகி
8. பெருகியே சக மனிதர்கட்கும்
பெருந்தயவை காட்டி மதித்து
தருமமுடன் சமத்துவநிலை கூட்டி
தனித்துவம் அடைய நேரும்
9. நேருமைபட எல்லாச் செயலும்
நீதி குன்றா உயரவே
பெருமைபட மேலவர்கள் தானும்
பேருபட உங்களை வாழ வைக்க
10. வைக்கவே ஆசிதந்து வருவர்
வையகம் காக்க உண்டான
ஆக்கம்பல வரமாக அருளி
ஆசியுடன் உடனிருந்தும் காப்பர்
11. காப்பாக அனைவரும் உடன்வர
கலியுகம் ஞானயுகம் சத்தியயுகம்
மூப்பில்லா மகான்களால் அடையநேரும்
முழுமையான மாற்றம் காண நேரும்
அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—